# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 29 புதன்கிழமை (14-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 253


# ஈழ அகதிகளை வெளியேற்ற
# தமிழக பொலீஸாரும் சிபாரிசு!

## போராளிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த வேறு வழி இல்லையாம்

சென்னை, ஆக. 14

தமிழகத்தில் ஈழப் போராளிகளின் நடமாட்டத்தை தமிழகப் பொலீஸாரினால் முழுமையாகக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது. போராளிகளின் நடமாட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் ஈழஅகதிகள் அனைவரையும் தமிழ்நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

— இவ்வாறு தமிழ்நாடு மாநில பொலிஸ் திணைக்களம் தமிழக அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

தமிழ்நாடு மாநில பொலீஸின் சட்டம்— ஒழுங்கு நடைமுறைப்படுத்தும் பிரிவிற்குப் பொறுப்பான இன்ஸ்பெக்டர் ஜெனரல் வோல்டர் தேவாரம் திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

ஈழ அகதிகளை வெளியேற்ற வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி மற்றும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோர் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்தை, வலியுறுத்தும் வகையில் தமிழக் பொலீஸ் இந்த சிபாரிசைத் தெரிவித்திருக்கிறது.

திரு. தேவாரம் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்ததாவது:-

[3 ஆம் பக்கம் பார்க்க]

### தஞ்சம்கோரும் இலங்கையர் உட்பட அனைத்து

## அகதிகளின் கைவிரல் அடையாளம் பதிவு செய்ய பிரிட்டிஷ் அரசு முடிவு

பிரிட்டனில் அடைக்கலம் கோரும் இலங்கையர் உட்பட அனைத்து வெளிநாட்டுப் பிரஜைகளினதும் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் யோசனை ஒன்றை பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கென்னத் பேக்கர் வெளியிட்டிருக்கிறார்.

வெளிநாடுகளில் இருந்து அதிக எண்ணிக்கையில் அகதிகள் பிரிட்டன் வருவதைத் தடுக்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்த யோசனை வெளியிடப்பட்டிருக்கிறது.

பிரிட்டனில் அடைக்கலம் கோருபவர்களில் பெரும்பாலோர் இலங்கைத் தமிழர்கள் என்று பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 12 ஆண்டுகளில் சுமார் 11 ஆயிரத்து 500 இலங்கையர் பிரிட்டனில் தஞ்சம் கோரி விண்ணப்பித்தனர். அவர்களில் 73 பேருக்கு மட்டுமே பூரண அகதி அந்தஸ்து கிடைத்தது.

இன்னும் சுமார் 5,300 பேருக்கு பிரிட்டனில் தங்க அனுமதி வழங்கப்பட்டது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் கொண்டு

## புலிகள் தாக்கி வருவதால் வான் நடவடிக்கை பாதிப்பு!

### படை அதிகாரியே ஒப்புக் கொள்கிறார்

கொழும்பு, ஆக. 14

சுமார் ஐயாயிரம் அடி தூரம் சென்று தாக்கக் கூடிய 20மி. மீ. துப்பாக்கிகளை விடுதலைப் புலிகள் அண்மையில் பெற்றிருப்பதால், விமானத் தாக்குதல் நடவடிக்கைகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன.

பலாலியில் நிலை கொண்டுள்ள விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அரசு சார்பு கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

20 மி. மீ. துப்பாக்கிகளுடன் 2,500 அடி தூரம் சென்று தாக்கக் கூடிய 50 துப்பாக்கிகளும் புலிகளிடம் இருக்கின்றன.

இதனாலேயே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவு முகாம் முற்றுகையை அரச படைகளினால் முறியடிக்க முடியாது நிலை ஏற்பட்டது.

ஆனையிறவுச் சண்டையின் போது புலிகள் தமது 20 மி.மீ. துப்பாக்கிகளால் விமானம் ஒன்றையும், ஹெலிக்கொப்டர் ஒன்றையும் தாக்கி உள்ளனர்.

புலிகள் இத்தகைய துப்பாக்கிகளைப் பயன்படுத்தியதால் ஆனையிறவு முகாமுக்குள் விமானத்தில் இருந்து உணவுபோட முடியாத நிலை விமானப் படையினருக்கு ஏற்

(3ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவுக்கு வாகன அணிமூலம் உணவுப் பொருள்

யாழ்ப்பாணம், ஆக. 14

முல்லைத்திவு மாவட்டத்துக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வாகன அணி ஒன்று கொழும்பிலிருந்து நேற்று வவுனியாவை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அநேகமாக இன்று அது முல்லைத்தீவைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-5)

### வல்லையில் ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஆக. 14

நேற்று மாலை 6.45 மணியளவில் வல்லை [illegible] பகுதியில் ஹெலி ஒன்று [illegible] வேட்டுக்களைத் தீர்த்தது. (உ-5)

### அம்பாறையில் ஒரே குடும்பத்தில் ஐவர் பலி!

கொழும்பு, ஆக. 14

அம்பாறை மாவட்டக் கிராமம் ஒன்றில் இனந் தெரியாதோர் நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர் என்று கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த [illegible] அவர்களின் மூன்று குழந்தைகள் உயிரிழந்தனர் [illegible] தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## அம்பாறையில் தாக்குதல்; பொலீஸார் இருவர் பலி!

### ஆயுதங்கள் மீட்பு; ஜீப் சேதம்!!

யாழ்ப்பாணம், ஆக. 14

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பொலீஸ் காவல்அரண் மீதும், ஜீப் மீதும் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் இரு பொலீஸார் கொல்லப்பட்டனர். ஐந்து பொலீஸார் படுகாயமடைந்தனர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 9. 30 மணியளவில் சென்றல் காம்புக்கும் 8 ஆம் கொலனிக்கும் இடையே - பிரதான வீதியிலுள்ள - பொலீஸ் காவல்அரண் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

அந்த சமயம் வீதி வழியே வந்த பொலீஸ் ஜீப்பும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தத் தாக்குதலில் பொலீஸார் இருவர் கொல்லப்பட்டனர். பொலீஸ் ஜீப்பும் முற்றாகச் சேதமடைந்தது. அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. (உயர்தரம்) பரீட்சை நடக்கும் சாத்தியம் இல்லை!

யாழ்ப்பாணம், ஆக. 14

இப்போது வடக்கிற்கு வெளியே நடைபெற்று வரும் ஜி சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சை கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உடனடியாக நடைபெறுவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இன்று பரீட்சையின் ஒன்பதாவது நாளாகும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை அட்டவணைப்படி, அனைத்து விஞ்ஞானப் பரீட்சைகளும் வடக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நேற்றுடன் நடந்து முடிந்துவிட்டன.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்த பின்னரே எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை வினாத்தாள்களை வடக்குக்கு அனுப்ப முடியும் என்று பரீட்சைஆணையாளர் அறிவித்திருப்பதுதெரிந்ததே.

நேற்று வரை பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைப்பதற்கான அறிகுறிகள் ஏதும்

[ 3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவு படையினர் மீது திங்கள் இரவு கடும் தாக்குதல்

கொழும்பு, ஆக. 14

ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீலங்கா படையினர் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதலை நடத்தினர் என்றும்—

அதில் பல படையினர் காயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை—

நேற்றுக் காலை 8.00 மணி தொடக்கம் ஆனையிறவு முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் மற்றும் ஹெலிகள் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்ட வண்ணமிருந்தன. [உ-எ-117)

## ஈழத்திலிருந்து சென்ற மூவர் தமிழகத்தில் கைது!

ஈழத்திலிருந்து படகு ஒன்றில் சென்று இராமநாதபுரம் மாவட்டம், இராமகிருஷ்ணபுரம் என்ற கடலோரக் கிராமத்தில் சவுக்கு மரத் தோப்பு ஒன்றுக்குள் மறைந்து கொண்டதாகக் கூறப்படும் ஐவரில் மூவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்

ஐவரில் ஒருவர் சிவகாசியில் வைத்துக் கைதானார். அவர் ஈழத்தைச் சேர்ந்த சேவியர் என அடையாளம் காணப்பட்டார்.

கைதான மற்றைய இருவரும் கரையூர் மணல்மேட்டைச் சேர்ந்த முத்து, தேவேந்திரன் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பொலீஸாரிடம் சிக்காமல் தப்பிய ஏனைய இருவரும் ஈழத் தமிழர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாம் பயணம் செய்த படகை இந்தியக் கடற்படைக் கப்பல் துரத்தி வந்ததாக கைதான ஒருவர் தெரிவித்தார் என பொலீஸார் கூறினார்.

அவர்கள் ஐவரும் மருந்து வகைகளைப் படகில் எடுத்துக்கொண்டுபோய் யாழ்ப்பாணத்தில் கொடுத்துவிட்டு வந்திருக்கலாம் என்று பொலீஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

குடியிருக்கச் சகல வசதிகளுடன் மூன்று பரப்புக் காணி கொடிகாமம் புகையிரத நிலைய வீதியின் தென் திசையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல: 341, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [[சி/0354]

### விற்பனைக்கு வர்த்தகமும் நிதியும்

உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், வர்த்தசம், வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்துதல் போன்ற பகுதிகள் அடங்கியது. தொகுப்பு: தேவராஜன் ஜெயராமன், B. Com [Hons] MBA கிடைக்குமிடம்: பூபாலசிங்கம், புத்தகசாலை. [சி/0279]

### புதிய மீரா நாவல்

முடிவல்ல ஆரம்பம், இருள் இரவில் அல்ல நாவல்களை ரசித்துப் படித்த வாசகர்களுக்கு இந்நாவல்களை எழுதிய, சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய இன்னொரு வித்தியாசமான சமூக நாவல் முள்முடி மன்னர்கள் விற்பனையாகின்றது. [17804]

### தேவை

சவுக்கு விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0352)

---

ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டி (Cuters) தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். நியூவே றெக்கோடிங் சென்ரர், நல்லூர், யாழ்ப்பாணம். (17486)

---

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளை மிகவும் நாகரிகமான முறையில் தானாக வெட்டித் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் ரெயிலர் உடன் தேவை. நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். 'திருமகள்தையல்நிலையம்' [கல்வியங்காட்டு சந்தையருகில் பெற்றோல் செற் முன்பாக] கல்வியங்காடு. (17771)

### மணமகள் தேவை

யாழ். இந்துப் பெற்றோர், கொழும்பில் உள்ள வங்கியில் தொழில் பார்க்கும் 32 வயது மகனுக்கு படித்த, அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இல. 340, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [17776]

### வியாழ மாற்றம்

இன்று [14-8-91] வியாழ மாற்றம், 22-8-91 செவ்வாய் மாற்றம். விலை: ரூபா 6/50. விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் நூலாசிரியர் Prof: சத்தியதாஸன் [Mech. E. Elec. E] ஞானம்ஸ் சித்தன் கேணி (17797)

### வர்த்தக வினா விடை

G. C. E. [O/L] ஆண்டு 10 மாணவர்களுக்குரிய வர்த்தக வினா - விடைத் தொகுப்பு நூல் விற்பனையாகின்றது. ஆக்கியோன்: த. தர்மராஜா. பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, மண்டேலா புத்தகசாலைகளிலும், மானிப்பாயில் நாயகபாலன் புத்தகசாலையிலும், கொக்குவில் இந்துக் கல்லூரி அருகாமையில் உள்ள புத்தகசாலையிலும் விற்பனையாகின்றது. [17802]

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4206]

---

முதலாவது

## பிறந்த நாள் வாழ்த்து



## செல்வி மேரி அன்ரனிஸ்க்கா
(தீபிகா ராணி)

பாஷையூரைச் சேர்ந்த வி. திரேசன் தங்கராணி தம்பதிகளின் செல்ல, செல்வ மகள் தீபிகா ராணி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (14-08-1991) அமைதியாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

பதுவைப் புனித அந்தோனியாரின் பேரால் பல கலைகளும் கற்று, பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

தாய், தந்தையர், வி. மரியருள்தாஸ், செலின்றோஸ், ஞானத்தாய் தந்தையர், குலசிங்கம் பவுளா.

165, பீச்றோட்,
பாஷையூர், யாழ்ப்பாணம். [17784]

---

ஸ்ரீ ராம ஜெயம்

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## வைத்திலிங்கம் தர்மரட்ணம்

தோற்றம்: 20 - 11 - 1920

மறைவு: 06 - 08 - 1989

திதி: 14 - 08 - 1991

ஆண்டுகள் இரண்டு சென்றாலும் இன்றும் நீங்கவில்லை எம் துயர் அலைகள்; ஆவி விடுத்துப் போன பின்பும் நாம் ஆயிரமாய் கலங்குகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களைநினைவு கூரும்:
மனைவி, மக்கள்.

''விஷ்ணு பவனம்''
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (17800)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 08 — 1938

மறைவு: 14 — 08 — 1989



கிறிஸ்துவிற்குள்

## கிறிஸ்த்ததாஸ் கதிரேசு சிவகுரு
(C. K. சிவகுரு, வைத்திய ஆய்வுகூட நுண் ஆய்வாளர்)

'' ஜீவனுள்ள நாட்களில் நான் நேசித்தவர்களே மரணத்தின் பின் என்னை மறந்து விடாதீர்கள்''

தங்களை என்றும் மறவாத:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள்.

''மலரகம்'', சுன்னாகம் தெற்கு. [17806]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 01 — 05 — 1969

மண்ணின் விடிவில்: 14 — 08 — 1990



## இராமச்சந்திரன் அன்புசிவம்

ஆண்டொன்று சென்றாலும் - அன்புசிவா
ஆறவில்லையடா உன் நினைவு
உறுதியாக நீ நினைத்த விடுதலைக்காய்
இறுதியாக நீ கொடுத்த உன்மூச்சு
ஓயவில்லை எம்முடனே சுழல்கிறது
நீ நினைத்த சூரியன் விரைவில் எழுவான்
அதற்காய் வித்தாக விதைந்தவனே
செலுத்துகிறோம் அஞ்சலிகள்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

வினோத் வீதி, வல்வெட்டித்துறை. (17489)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1927 — 02 — 07

உதிர்வு: 1990 — 08 — 14



திருமதி

## மேரி நவமணி அருளானந்தம்

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறும் பொருட்டு 14 - 08 - 91 புதன்கிழமை அதாவது இன்று காலை 6-15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்திலும், 6-00 மணிக்கு ஆச்சிரமத்திலும் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத்திருப்பலியில் பங்கு பற்றி, இவருக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், உற்றார், உறவினர்கள்,

60/1A, சலமன் லேன்,
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [17487]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யுத்தம் தொடரும்!

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்தத்திற்குச் செலவிடுவதற்கென, அடுத்த வருடத்துக்குரிய வரவு - செலவுத் திட்டத்தில் 2,500 கோடி ரூபா ஒதுக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்குரிய (1991) வரவு- செலவுத் திட்டத்தில் முழுப் பாதுகாப்புச் செலவுகளுக்கும் 1,170 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. நாடு சுதந்திரமடைந்த பின், 1948ஆம் ஆண்டின் பின், பாதுகாப்புச் செலவுக்கு ஆகக்கூடிய தொகை ஒதுக்கப்பட்டிருந்ததாக அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. நாட்டின் மொத்தச் செலவில் அந்தத் தொகை 12.7 சதவீதமானது என்றும், ஸ்ரீலங்கா போன்ற சிறிய நாட்டுக்கு அது மிகக் கூடுதலான பளு என்றும் பொருளாதார நிபுணர்கள் அப்போது சுட்டிக்காட்டியிருந்தார்கள்.

ஆனால் திரு. விஜேதுங்கா சொல்வதைப் பார்த்தால், 2,500 கோடி ரூபாவும் வடக்கு-கிழக்குப் போருக்கு மட்டுமே ஒதுக்கப்படவிருக்கிறது. அதாவது நாட்டின் மொத்தப் பாதுகாப்புச் செலவு ஆகக்குறைந்தது 4,000 கோடி ரூபாவாக இருக்கும் என்று உத்தேசமாக மதிப்பிடலாம்,

1991 வரவு - செலவுத் திட்டத்தில் மொத்தம் 670 கோடி ரூபா துண்டு விழுந்தது. அதனுடன் ஒப்பிடும்போது அடுத்த வருடத்தில் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி, ஏறக்குறைய நான்கு மடங்காகும்!

சென்ற வருடம் தொடங்கிய பெரும் யுத்தம் இந்த வருடமும் தொடர்கிறது. அதனை அடுத்த ஆண்டிலும் அரசு தொடர்வதற்குத் திட்டமிட்டிருக்கிறது என்பதையே நிதி ஒதுக்கீடு நிரூபிக்கிறது. அவ்வாறில்லாவிடில் தொடரும் என்று எதிர்பார்க்கிறது என்று கொள்ளவேண்டும்.

அதாவது வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்தும் எண்ணம் அரசுக்கு அடிமனதில் இல்லை. தமிழர் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்த்து நாட்டை யுத்த குணத்தில்— சுபாவத்தில்— இருந்து மாற்ற வேண்டும் என்று அரசு விரும்பவில்லை.

பெரும் பணச் செலவில் யுத்தத்தைத் தொடரவேண்டும். அந்தப் போர்வையில் தென்னிலங்கையில் உள்ள பிரச்சினைகளை மூடி மறைத்துக் கொண்டு தனது ஆட்சியை, எதிர்ப்போ, குந்தகமோ இன்றி பதவிக் காலம் முழுவதற்கும் தொடர வேண்டும்- இத்தகைய உள்மனதுடனேயே அரசு செயற்படுகிறது என்பதை யுத்தச் செலவு நிதி ஒதுக்கீடு மிகத் துலாம்பரமாக்குகின்றது.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதற்கு ஆர்வம் உண்டு என்று காட்டிக் கொள்வதற்காக அனைத்துக் கட்சி மாநாட்டை அரசு பிடி நழுவவிடாமல் கவ்விப்பிடித்துக் கொண்டது. அதற்குப் பக்கத் துணையாக இப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. இரண்டையும் தூக்கிப் பிடித்துக் காட்டிக் கொண்டு, நீண்ட காலத்தை கடத்துவதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது.

நடைமுறையில் யுத்தத்தை நடத்திக் கொண்டு, பேச்சுக்கு அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு முழுப் பதவிக் காலத்துக்கும் ஆட்சியை இழுத்துச் செல்வதற்கு அரசு முனைந்து நிற்கிறது.

அதனையே பெருந்தொகை நிதி ஒதுக்கீடும், இராணுவத்தின் ஆளணி, ஆயுத படை அதிகரிப்பு நடவடிக்கைகளும் காட்டி நிற்கின்றன!

# வெற்றியை விரைவில் சுமக்க

## உங்கள் பெயர்களையும் எழுதுங்கள்!

### போர்க்கால கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஆக. 14

இலங்கையில் இரண்டு இராணுவங்கள் இருக்கின்றன; ஒன்றுக்கு நாடு இருக்கிறது. மற்றையதற்கு நாடு இல்லை— என்று கொழும்புப் பத்திரிகைகள் எழுதும் அளவுக்கு நாம் ஒரு மரபுவழிப் படையாகிப் போரில் ஈடுபட்டுள்ளோம்.

வெற்றியை நாம் நிச்சயமாகவே சுமப்போம். அது விரைவில் வருவதற்கு வீட்டுக்கு ஒருவர் வாருங்கள். உங்கள் பெயர்களும் தமிழீழ வரலாற்றில் எழுதப்பட வேண்டும்.

வடமராட்சி - சுலிகைச் சந்தியில் திங்கள் நடந்த போர்க்காலக் கருத்தரங்கில் உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பேசுகையில் மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

ஆனையிறவில் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் உலகத்தையே உற்று நோக்க வைத்த பெரும் போராகும். விடுதலைப் புலிகள் உயிரை இழப்பார்கள்; உடலின் அங்கங்களை இழப்பார்கள்; ஆனால் மானத்தை இழக்க மாட்டார்கள் என்று எதிரிக்கும் உலகத்திற்கும் உணர்த்திய தியாகப் போர்.

எமது எல்லைக்குள் எதிரி இனிச் சுலபமாக நுழைய முடியாது; சுதந்திரமாக உலா வரமுடியாது என்பதை ஆனையிறவுப் போரின் மூலம் வேங்கைகள் விளங்கவைத்துள்ளனர்.

ஆனையிறவு படையினரை மீட்க 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் தரையிறக்கப்பட்டனர். அவர்களுக்கு உதவியாக 15 யுத்த விமானங்கள், 20 க்கும் மேற்பட்ட பீரங்கிப் படகுகள் இன்னும் விதம் விதமான கனரக வாகனங்கள் களத்தில் செயற்பட்டன.

ஆனால் இத்தகைப் பெரும் பலத்துடன் வந்தவர்களை எதிர்கொண்ட வேங்கைகளின் எண்ணிக்கை என்ன? அவர்கள் கையில் ஏந்திய போர்க் கருவிகள் எவை? மிகக் குறைந்த இரும்புத் துப்பாக்கிகள் என்றாலும் இந்தப் போரில் நாம் வெற்றி கொண்டோம்.

தமிழ் மன்னன் சங்கிலியன் காலத்தில் 1591 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 26 ஆம் திகதி தமிழீழத்தின் இறைமையை இழந்தோம். அன்று இழந்த தமிழீழத்தை இன்று எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் காலத்தில் திரும்ப மீட்டெடுப்பதற்காக போராடுகின்றோம். — என்றார்.

கருத்தரங்கில் விடுதலைப் புலிகள் பிரமுர்களான தினேஸ், ஆர்த்தி, கீர்த்தனா ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (அ-ஒ)

### பெண் நீதிவான் வழக்கு:

## அந்த ஆண் நீதிவானுக்கு ரூ. 25 ஆயிரம் பிணை!

கொழும்பு, ஆக. 14

முன்னாள் பெண் நீதிவான் தொடர்ந்த ஜீவனாம்ச வழக்கில் பிரதிவாதியாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆண் நீதிவானை கொழும்பு மேலதிக பெண் நீதிவான் திருமதி ஐராங்கனி பெரேரா 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்தார்.

வெளிநாடு செல்வதற்கு பிரதிவாதியான நீதிவானுக்கு பாஸ்போர்ட் வழங்க வேண்டாம் என்று மேலதிக நீதிவான் குடியகல்வு - குடிவரவு கட்டுப்பாட்டதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இவ்வழக்கு அக்டோபர் 18 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஜீவனாம்சம் கோரும் முன்னாள் பெண் நீதிவானின் பெயர் செல்வி பத்மினி வல்கம. இவர் பத்தரமுல்லையைச் சேர்ந்தவர்.

பிரதிவாதியான ஆண் நீதிவானின் பெயர் திரு. பிரியங்கரா பெர்னாண்டோ. தற்சமயம் இவர் அனுராதபுரம் நீதிவானாக பணி புரிகிறார். (இ-எ)

## பாரதிய ஜனதா கட்சி எம். பி. உப சபாநாயகராக தெரிவு

புதுவில்லி, ஆக. 14

இந்திய லோகசபை உப சபாநாயகராக பாரதிய ஜனதாக்கட்சி எம். பியான திரு. மல்லிகார் ஜுனையா 174 பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனதா தள்—இடதுசாரி கட்சிகளின் வேட்பாளரான ஜனாப் ரஷீத் மசூதுக்கு 104 வாக்குகள் கிடைத்தன.

திரு. மல்லிகார்ஜுனையாவுக்கு 278 வாக்குகள் கிடைத்தன. [ஒ-எ]

## 40 நாட்களுக்குப் பின் நெடுந்தீவுக்குப் படகு

நெடுந்தீவு, ஆக். 14

நெடுந்தீவுக்கான படகுச் சேவை இன்று புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 40 தினங்களாக இந்த படகுச் சேவை ஸ்தம்பிதம் அடைந்திருந்தது தெரிந்ததே.

நெடுந்தீவில் இருந்து படகு வருவதற்கு நயினாதீவு கடற்படையினர் தற்போது அனுமதி அளித்துள்ளனராம்.

நெடுந்தீவுக்கான படகுச் சேவை திடீர் என்று தடைப்பட்டதால், ஒரு மாத காலத்துக்கு மேலாக நெடுந்தீவு மக்கள் பலர் குறிகட்டுவானிலும் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருந்தனர். [இ-111]

### ஈழ அகதிகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஈழத் தமிழ் அகதிகள் மத்தியில் இருந்து போராளிகளை இனங் காண முடியாதிருக்கிறது. இதனால் தமிழகத்தில் போராளிகளின் நடமாட்டத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த இயலாமல் உள்ளது.

ஈழப் போர்ராளிகளுக்கு வீடுகளை வாடகைக்குக் கொடுப்போர் மீதும், மற்றும் அவர்களுக்கு உதவியாக இருப்போர் மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஈழப் போராளிகளுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ் நாட்டவர் அனைவரையும் களைந்தெடுப்பது என்று தமிழக அரசு உறுதி பூண்டுள்ளது.

போராளிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் எவர்மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயும்—என்றார். (உ-எ)

### புலிகள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டது.

ஆனையிறவு முகாம் முற்றுகையை முறியடிப்பதற்கு விமானத் தாக்குதல் நடத்த முடியாது போனதாலேயே, வெற்றிலைக்கேணியில் படைகளைக் கொண்டு வந்து இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்படி அந்த [illegible] னார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### ஜி. சீ. ஈ...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தென்படவில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால்—

இனிமேல் அனுமதி கிடைத்து, பின்னர் வினாத்தாள்களை வடக்கிற்கு அனுப்பி, அதைத்தொடர்ந்து பரீட்சை ஏற்பாடுகளைச் செய்து, எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சைகளை நடத்துவது என்பது சாத்தியமானதல்ல என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

அவ்வாறு தற்போதைய பரீட்சையின் ஏதேனும் சில பாடங்களையேனும் வடக்கில் நடத்த முடியாமல் போனால் —

கடந்த வருடம் செய்தது போல இம்முறையும் வடக்கில் ஜி. சீ. ஈ. (உயர்தர) [illegible] நடத்த வேண்டிய நிலை ஏற்படும். (உ)

## நல்லூர் உற்சவ காலத்தில்

யாழ்ப்பாணம், ஆக. 14

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நல்லூர்க் கந்தன் திருவிழா நாட்களில் நல்லை ஆதீனத்தில் தினமும் காலை 5 மணிக்கு திருமுறை வீதிப் பஜனையும், காலை 9 மணிக்கு இலவச சமய தீட்சையும் இடம்பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு திருமுருகாற்றுப்படை என்னும் பொருளில் திரு. சண்முகவடிவேலின் உரையும், 3 மணிக்கு கந்தபுராண படனமும் நடைபெறும்.

மாலை 5-30 மணிக்கு திருமுருககிருபானந்தவாரியாரின் சீடரான திரு. சிவசண்முகமூர்த்தி 'கந்தரனுபூதி' என்னும் பொருளில் சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். [அ]

## திரும்பவில்லை

தென்மராட்சி, ஆக. 14

வெற்றிலைக்கேணிப் பகுதியில் கடந்த மாதம் 12 ஆம் திகதி படையினர் தரையிறக்கப்பட்ட அன்று கடற்றொழிலுக்குச் சென்ற இரு சகோதரர்கள் இன்னும் வீடு திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை (38 வயது), தம்பிப்பிள்ளை வசந்தகுமார் (25 வயது) ஆகியோரே அந்த இருவருமாவர். (ஒ-117)

## 'குமண' சென்றது

கொழும்பில் சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் சுமார் 30 பேரையும் அவர்களது உதவியாளர்களையும் ஏற்றிக் கொண்டு 'குமண' கப்பல் நேற்று மாலை புறப்பட்டுச் சென்றது. [ஒ-15]

## சங்கிலி அபேஸ்

ஆடிச்செவ்வாய் தினமான நேற்று நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலில் அடியார் ஒருவரின் 8 பவுண் சங்கிலியும், ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டன.

கோவிலில் பொங்கிக் கொண்டிருந்த அடியார், அவரது ''சேர்ட்டை'' ஒரு மூலையில் கொழுவியிருந்த சமயம், பணமும் சங்கிலியும் அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## கட்டுவனில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 14

கட்டுவன் பகுதி இராணுவத்தினருடன் நேற்றுக்காலை இடம்பெற்ற மோதலில் வீர வேங்கை சிசர் [தர்மதாஸ் அன்ரன் ஜேசுதாஸ் — பருத்தித்துறை] வீரமரணமடைந்தார். [ஒ]

### குவைத்தில் வேலை இழந்தோருக்கு

## ஐ. நா. பணம் கிடைத்தவுடன் நஷ்ட ஈடு வழங்கப்படும்

கொழும்பு, ஆக, 14

ஐ. நாவில் இருந்து நஷ்ட ஈட்டுப் பணம் கிடைத்த பின்னரே குவைத்தில் வேலையிழந்த இலங்கையருக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இத்தகவலை தொழில் அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா வெளியிட்டார்.

குவைத்தில் வேலையிழந்த இலங்கையர் பற்றிய விவரம் அமைச்சிடம் உள்ளது. அப்படித் தொழில் இழந்தோர் பற்றிய விவரங்களை சேகரித்திருப்பதாகக் கூறும் விஷமிகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

### அம்பாறையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டன.

அவை வருமாறு:-

★ ரி 56-1 ரகத் துப்பாக்கி — 01
★ அதற்குரிய ரவைக்கூடு — 01
★ ரவைகள் — 25
★ 84 எஸ் ரகத் துப்பாக்கிகள் — 03
★ அவற்றிற்குரிய ரவைக்கூடுகள் — 06
★ ரவைகள் — 360

இந்த மோதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டாம் லெப்டினன்ட் விவேக் [உதயகுமார்-பெரிய கல்லாறு, மட்டக்களப்பு] வீர மரணம் அடைந்தார். [ஒ-எ]

## திருமலை மாணவனுக்கு புலமைப் பரிசில்

திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவரான செல்வன் குலசேகரம் ரவிச்சந்திரன், புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் இங்கிலாந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் உயர்கல்வி பெறத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

திருகோணமலை மாணவர் ஒருவர் கேம்பிரிட்ஜ் புலமைப் பரிசிலுக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

செல்வன் ரவிச்சந்திரன் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் நான்கு பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்றிருந்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கா சிமெந்து
துறைமுக ஊழியர் சங்கம்,
காங்கேசன்துறை.

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இணுவில்.

காலம்: 18 - 08 - 1991 ஞாயிறு
காலை 9-00 மணி

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. தருமநாயகம்,
தலைவர்.

மஞ்சத்தடி, இணுவில்,
14 - 08 - 1991. [4239]



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னையின் மடியில்:
12 - 5 - 1936

ஆண்டவன் அடியில்:
15 - 7 -1991

### அமரர் கணபதி செல்வராசா
(இளைப்பாறிய மின் இணைப்பாளர்)

மெழுகாய் உருகி எங்கள் வாழ்வை
மேன்மையுறச் செய்த எங்கள் தெய்வமே!
ஆண்டுகள் ஆயிரந்தான் சென்றாலும்
உங்கள் அன்பு முகம் என்றும்
எங்கள் நெஞ்சைவிட்டு நீங்காது.

காங்கேசன்துறை சிக்னல் வீதியைச் சேர்ந்தவரும், தற்போது பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமாகிய எமது குடும்பத் தலைவரின் மரணச்சடங்கில் கலந்துகொண்டு, சகல வழிகளிலும் உதவி புரிந்து, அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும், இன்று பொற்பதி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் பங்குபற்றும் அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக.

அன்பு மனைவி, மக்கள்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (4240)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
06 - 10 - 1969

மறைவு:
15 - 07 - 1991

### அந்தோனிப்பிள்ளை அல்போன்ஸ் குணரட்ணம்

எங்கள் குடும்பத்தின் குணக்குன்றே,
அன்புக் குணமே!
உன் அகால மரணப் பிரிவினால் ஏங்கிப் பரிதவித்து துடிதுடித்துக் கண்ணீர் சொரியும்,

ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
அப்பையா, உற்றார், உறவினர்கள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக தும்பளை புனித மரியாள் ஆலயத்தில் இன்று 14 - 08 - 1991 [புதன்கிழமை] காலை 7-30 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

அலெக்சாண்டர் அந்தோனிப்பிள்ளை.

பலாலி வடக்கு,
வயாவிளான். [17790]


## நாளை நல்லூர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 14

பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் பக்திபூர்வமாக் ஆரம்பமாகவுள்ளது.

இதனையொட்டி கோவில் கொடிச் சீலை இன்று மாலை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வேல் முருகன் ஆலயத்திலிருந்து நல்லூர் கோவிலுக்கு எடுத்து வரப்படவுள்ளது. (ஒ-5)

## உதவி கோரி 'கரங்கள்' வேண்டுகோள்

யாழ்ப்பாணம் ஆக. 14

சலவை செய்த வெள்ளை வேட்டிகள், படுக்கைவிரிப்புகள், சாரம், ஷேர்ட் போன்றவற்றை வடமராட்சி கரங்கள் பொதுப்பணிமனையில் வழங்குமாறு பொதுமக்கள் கேட்கப்படுகின்றனர்

நோயாளர்களைப் பராமரிக்க விரும்பும் சேவையாளர்கள் மேற்படி பணிமனையில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு 'கரங்கள்' பொதுப்பணியகத் தலைவர் கேட்டுள்ளார். (இ)

## உப்புக் கூட்டு. ஊழியரின் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம், ஆக. 13

கடன் அடிப்படையில் உலர் உணவைப் பெற விரும்பும் வடபிராந்திய தேசிய உப்புக் கூட்டுத்தாபன நிரந்தர ஊழியர்கள் தமது பெயர் விவரங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாக உத்தியோகத்தரிடம் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஊழியர்கள் தமது விவரங்களை பரந்தன் வை. எம். சி. ஏயில் பதியுமாறும் கோரப்பட்டுள்ளது. [ஒ-3]

## அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 14

பாடசாலைகளின் உடனடித் தேவைகள் குறித்தும், அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடுவதற்காக பாடசாலை அதிபர்களுக்கும், கொத்தணி அதிபர்களுக்கும் கோட்ட மட்டத்தில் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கோட்டங்களுக்குரிய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கூட்ட விவரங்கள் வருமாறு:-

**பண்டத்தரிப்பு**

இன்று பிற்பகல் 2 மணி — பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி (பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம்)

**தென்மராட்சி**

நாளை காலை 10 மணிக்கு — சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.

**வடமராட்சி**

நாளை மறுதினம் காலை 10 மணிக்கு — வட இந்து மகளிர் கல்லூரி. (உ)

## பறவை கடத்தல் முயற்சி முறியடிப்பு

கொழும்பு, ஆக. 14

இலங்கையின் தேசியப் பறவையான மயில் உட்பட சுமார் 10 ஆயிரம் பறவைகளை வெளிநாடுகளுக்குக் கடத்த எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முயற்சியை பொலீஸார் முறியடித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பைச் சேர்ந்த சிலர் அக்கடத்தல் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர் என்று சொல்லப்படுகிறது. (இ-எ)

ஆயுத தயாரிப்பு தொழிற்சாலை:

## திருச்சியில் கைதானோரின் பொலீஸ் காவல் நீடிப்பு

திருச்சி மாவட்டம், ஆவாரம்பாளையத்தில் ஆயுதத் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக கைதானவர்களை மேலும் 30 நாள் பொலீஸ் காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது.

அவர்கள் அனைவரும் இந்தியத் தமிழர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சம்பவம் தொடர்பாக கைதான மூன்று இலங்கைத் தமிழ்ப் போராளிகளையும் ராஜீவ்காந்தி கொலை தொடர்பான வழக்கை விசாரிக்க நியமிக்கப்பட்டிருக்கும் விசேட நீதிவான் முன் ஆஜர் செய்யும்படி கோயம்புத்தூர் மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (இ-எ)

நிதி நிலைமையைச் சீராக்குவதற்கு

## அணு உலைகளை விற்க இந்தியா திட்டமிடுகிறது

புதுடில்லி, ஆக.14

இந்தியா தனது வெளிநாட்டுச் செலாவணியை சீர்படுத்துவதற்காக தன்னிடமுள்ள அணு உலைகளை வளர்முக நாடுகளுக்கு விற்கத் திட்டமிட்டுள்ளது.

பம்பாயில் உள்ள பாபா அணுசக்தி ஆராய்ச்சித் துறை அதிகாரிகள் இதுபற்றித் தெரிவிக்கையில், இந்த அணு உலைகள் இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாதவை என்று கூறினர்.

அணு சக்தி பரவலாக்கலைக் கட்டுப்படுத்தும் ஐ.நா. ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)


## ஞாபகார்த்த ஜெபக் கூட்டம்

காலஞ்சென்ற திருமதி சுசிலா ஜெயரத்தினம்

அவர்களின் ஞாபகார்த்த ஜெபக் கூட்டம் இன்று மாலை 5-00 மணிக்கு அன்னாரது நல்லூர், இல. 30, மருதடி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[17808] க. மகாலிங்கசிவம்



## ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடைபெறவிருக்கும்
போட்டிப் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

★ தொடர்ந்து 10 தினங்கள்
★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்

ஆரம்பம்: 18 - 08 - 1991 9-00 a. m.

★ அனுபவமிக்க ஆசிரியர்களின் இணைந்த சேவை
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 15/- மட்டுமே.

முன்னர் பயின்ற மாணவர்களுக்கு வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்

[இ-0283]



## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா

சுன்னாகம் சுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா ஜேர்மனியில் 9-8-1991 அன்று காலமானார்.

அன்னார் வ. சுப்பிரமணியம் [இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்], திருமதி தெய்வநாயகி தம்பதிகளின் அன்பு மகனும், சகுந்தலாதேவி [மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்] யின் அன்புக் கணவரும், மயூரன், நிரோஷனின் அன்புத் தந்தையும், திருமதி தேவராணி பரமேஸ்வரனின் அன்புச் சகோதரனும், அ. பரமேஸ்வரன் [சிமெந்துக் கூட்டுத்தாபனம்], சி. நடராசா [சவூதி அரேபியா], திருமதி கமலாதேவி கணேசானந்தன், திருமதி சரோஜினி புவனேந்திரராஜா [கனடா] ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சீனிவாசகம், திருமதி அன்னப்பிள்ளை [கொல்லங்கலட்டி] தம்பதியினரின் மருமகனும், வனிதா, பிரபா, ஜெகன், சியாம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜன், சர்மிளனின் பெரிய தந்தையாரும் ஆவார்.

தகவல்;
அ. பரமேஸ்வரன்

19, கடவைப்புலம்,
சுன்னாகம். [சி/0287]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [illegible] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 14 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org